IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE

(FAST TRACK COURT), VELLORE, VELLORE DISTRICT.

DEPOSITION OF WITNESS

OS.NO.76/2017 (OS.NO.75/2014) P.W.1

| | | |
|---|---|---|
| NAME | - | VISWANATHAN |
| FATHER'S NAME | - | SUBRAMANI |
| VILLAGE | - | ALAMELUMANGAPURAM |
| TALUK | - | VELLORE |
| CASTE | - | VANNIYAR |
| OCCUPATION | - | EX-ARMY (RETD) |
| RELIGION | - | HINDU |
| AGE | - | 57 |

Solemnly affirmed in accordance with the provision of Act X 1872 of the 11th day of August 2022.

முதல் விசாரணை.

நான் இந்த வழக்கில் வாதி. என்னுடைய முதல் விசாரணை சாட்சியத்திற்காக பிரமாண வாக்குமூலம் 16.06.2022 தேதியில் தாக்கல் செய்துள்ளேன். 21.03.1990 தேதியிட்ட முதல் பிரதிவாதிக்கும் அவரின் சகோதரர்களுக்கும் இடையே ஏற்பட்ட பாகப்பிரிவினை பத்திரத்தின் பதிவு நகல் தாக்கல் செய்கிறேன். அது வா.சா.ஆ.1 ஆகும். 22.10.1973 தேதியில் நவாப் ஜான் திரு.நடராஜன் என்பவருக்கு எழுதிக்கொடுத்த கிரைய பத்திரத்தின் பதிவு நகல் தாக்கல் செய்கிறேன். அது வா.சா.ஆ.2 ஆகும். நவாப் ஜான் மகன் சாப் ஜான் என்பவருக்காக ஜெகதாம்பாள் என்பவருக்கு எழுதிக்கொடுத்த கிரைய பத்திரத்தின் பதிவு நகல் தாக்கல் செய்கிறேன். அது வா.சா.ஆ.3 ஆகும். 22.01.1997 தேதியில் முதல் பிரதிவாதி ஜெயமூர்த்தி மற்றும் அவரின் மனைவி சித்ரா ஆகியோர்களுக்கு எழுதிக்கொடுத்த கிரைய பத்திரத்தின் பதிவு நகல் தாக்கல் செய்கிறேன். அது வா.சா.ஆ.4 ஆகும். 18.07.1994 தேதியில் கோவிந்தசாமி கவுண்டர் மகன் நடராஜன் அவர்களுக்கு முதல் பிரதிவாதி எழுதிக்கொடுத்த பொது அதிகார பத்திரத்தின் ஜெராக்ஸ் நகல் தாக்கல் செய்கிறேன். அது வா.சா.ஆ.5 ஆகும். 11.12.2002 தேதியிட்ட முதல் பிரதிவாதி 2ஆம் பிரதிவாதி பெயரில் எழுதிக்கொடுத்த கிரைய பத்திரத்தின் பதிவு நகல் தாக்கல் செய்கிறேன். அது வா.சா.ஆ.6 ஆகும். 12.03.2009 தேதியில் 2வது பிரதிவாதி 3வது பிரதிவாதிக்கு எழுதிக்கொடுத்த செட்டில்மண்ட் பத்திரத்தின் ஜெராக்ஸ் நகல் தாக்கல் செய்கிறேன். அது வா.சா.ஆ.7 ஆகும். 12.03.2009 தேதியில் முதல் பிரதிவாதியின் மகள் ஜோதி (4வது

பிரதிவாதி) என்பவருக்கு 2வது பிரதிவாதி எழுதிக்கொடுத்த செட்டில்மண்ட் பத்திரத்தின் ஜெராக்ஸ் நகல் தாக்கல் செய்கிறேன். அது வா.சா.ஆ.8 ஆகும். 30.08.1999 தேதியில் 1வது, 3வது பிரதிவாதி மற்றும் மூவர் 5வது பிரதிவாதிக்கு எழுதிக்கொடுத்த கிரைய பத்திரத்தின் பதிவு நகல் தாக்கல் செய்கிறேன். அது வா.சா.ஆ.9 ஆகும். 01.07.2004 தேதியில் 1வது மற்றும் 3வது பிரதிவாதிகள் 6வது பிரதிவாதிக்கு எழுதிக்கொடுத்த கிரைய பத்திரத்தின் பதிவு நகல் தாக்கல் செய்கிறேன். அது வா.சா.ஆ.10 ஆகும். 15.06.2005 தேதியில் ராமஜெய கவுண்டர் மனைவி பூங்காவனம்மாள் என்பவர் 7வது மற்றும் 8வது பிரதிவாதிகளுக்கு எழுதிக்கொடுத்த கிரைய பத்திரத்தின் பதிவு நகல் தாக்கல் செய்கிறேன். அது வா.சா.ஆ.11 ஆகும். 05.04.1955 தேதியில் ரங்கசாமி நாயக்கர் குமாரர் ரத்தின நாயக்கர் என்பவர் சிப்பாய் முருக கவுண்டர் மகன் கோவிந்தசாமி கவுண்டர் என்பவருக்கு எழுதிக்கொடுத்த கிரைய பத்திரத்தின் பதிவு நகல் தாக்கல் செய்கிறேன். அது வா.சா.ஆ.12 ஆகும். 23.08.1990 தேதியில் சிதம்பரம் குமாரர் கார்த்திகேயன் அவர்களுக்கு கோவிந்தசாமி கவுண்டர் மனைவி லட்சுமியம்மாள் கோவிந்தசாமி கவுண்டர் அவர்களின் குமாரர்களான சுப்பிரமணி, ராமலிங்கம், நடராஜன், உலகநாதன் மற்றும் உலகநாதன் மைனர் குமாரர் முருகன், ராமலிங்கம் மைனர் குமாரர் ஐயப்பன் ஆகியோர்கள் எழுதிக்கொடுத்த பொது அதிகார பத்திரத்தின் பதிவு நகல் தாக்கல் செய்கிறேன். அது வா.சா.ஆ.13 ஆகும். 26.06.1996 தேதியில் எனக்கு திருமணம் நடந்ததற்கான திருமண பத்திரிக்கை தாக்கல் செய்கிறேன். அது வா.சா.ஆ.14 ஆகும். பிப்ரவரி 1992ல் அனுமதிக்கப்பட்ட கட்டிட வரைபடம் தாக்கல் செய்கிறேன். அது வா.சா.ஆ.15 ஆகும். 13.03.2014 தேதியிட்ட சுப்பிரமணி அவர்களின் வாரிசு சான்றிதழ் அசல் தாக்கல் செய்கிறேன். அது வா.சா.ஆ.16 ஆகும். முதல் பிரதிவாதியின் இறப்பு சான்றிதழின் அசல் தாக்கல் செய்கிறேன். அது வா.சா.ஆ.17 ஆகும். ஜெகதாம்பாள் பெயரில் உள்ள மின் கட்டண அட்டை அசல் தாக்கல் செய்கிறேன். அது வா.சா.ஆ.18 ஆகும். என்னுடைய ஆதார் அட்டை நகல் தாக்கல் செய்கிறேன். அது வா.சா.ஆ.19 ஆகும். என்னுடைய குடும்ப அட்டை நகல் தாக்கல் செய்கிறேன். அது வா.சா.ஆ.20 ஆகும். நான் இராணுவத்தில் பணிபுரிந்ததற்காக என்னுடைய பணி விவரங்கள் தாக்கல் செய்கிறேன். அது வா.சா.ஆ.21 ஆகும். 1993 முதல் 1997 வரை நான் பெற்ற வருமானம் மற்றும் family allowance money order தாக்கல் செய்கிறேன். அது வா.சா.ஆ.22 ஆகும். நான் முதல் பிரதிவாதிக்கு அனுப்பிய 60 மணி ஆர்டர் ரசீதுகளின் சான்றிட்ட நகல்கள் தாக்கல் செய்கிறேன். அவை வா.சா.ஆ.23 வரிசை ஆகும். (வா.சா.ஆ.22 மற்றும் 23 ஆவணங்கள் பிரதிவாதிகள் 2, 3 மற்றும் 9 தரப்பு வழக்கறிஞர் ஆட்சேபனைக்குட்பட்டு குறியிடப்படுகிறது). தாவாப்படி தீர்ப்பாக கோருகிறேன்.

பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணைக்காக வழக்கறிஞர் கோரிக்கையின் பேரில் வழக்கு ஒத்திவைக்கப்படுகிறது.

என்னால் நேரடியாக தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சரால் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியிடம் படித்து காட்டி சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டு சாட்சியால் கையொப்பம் செய்யப்பட்டது.

P REVATHY

Digitally signed by P REVATHY
Date: 2022.08.11 15:28:33 +0530

கூடுதல் மாவட்ட நீதிபதி,
(விரைவு நீதிமன்றம்),
வேலூர்.